// மிக மிக அவசரம் // தனி கவனம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க.எண்.2503/ஆ5/2025, நாள்.25/06/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – போதை பொருள் பயன்பாடற்ற தமிழ்நாடு – 26.06.2025 அன்று சர்வதேச போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்கு எதிரான தினம் – 26.06.2025 அன்று காலை 11.00 மணியளவில் உறுதிமொழி ஏற்க தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் – 9, மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.தே2/244/2025, நாள்.24.06.2025

•••••

பார்வையில் காணும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்திற்கிணங்க, ஜுன் 26 சர்வதேச போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தி "போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு (Drug Free Tamilnadu) என்ற நிலையை உருவாக்கும் பொருட்டு அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் 26.06.2025 (வியாழக்கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் சர்வதேச போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்கு எதிரான உறுதிமொழி ஏற்க வேண்டும். (உறுதிமொழி மற்றும் போதை எதிர்ப்பு காணொலி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

உறுதிமொழி எடுக்கப்பட்டதற்கான அறிக்கையினை அரசுக்கு சமர்பிக்க வேண்டியுள்ளதால், உறுதிமொழி எடுக்கப்பட்டமைக்கான புகைப்படங்களை b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து இவ்வலுவலக ஆ5 பிரிவில் ஒப்படைக்குமாறு அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Form–ல் விவரங்களை பூர்த்தி செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. உறுதிமொழி
2. காணொலி
3. படிவம்
4. google form – https://docs.google.com/forms/d/e/1FAIpQLSeHlqm3oB2Dp0edBgZOiBkoXusZFqGvM3QEIJEV95utLDiLXg/viewform?usp=sharing&ouid=109116692137954752089

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

25-06-25

பெறுநர் –
அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை/ தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

# PLEDGE AGAINST DRUG ABUSE

I am aware of the ill effects of drug abuse and I solemnly promise not to indulge in drug abuse. I also swear my sincere contribution to prevent and advise my family members and friends not to fall into the habit of drug abuse. I assure to fully contribute for the cause of rescuing and guiding the drug abusers to give up drugs.

I will fully stand with the Government in their fight against the usage, consumption, and manufacturing of illegal narcotic substances in order to eradicate them from Tamil Nadu. I affirm to contribute with utmost dedication towards the growth of the State and welfare of its people.

Thank You.

# போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

Signature and seal of the officer :

Annexure – I

Institution Format

*(To be filled in the letter head of the institution)*

This is to certify that the pledge against drug abuse led by the Hon'ble Chief Minister of Tamil Nadu has been taken by ___________ number of Students in _______________ School / College / Institute on __________ (date) ________ at ______ (time).

Name of Institution :

Address of Institution :

District :

Name of Head of Institution :

Signature with seal of head of Institution :